


01.12.2025

## 48. தேவன் தங்கும் வாசஸ்தலம் தவிர, எந்த ஸ்தலமும் இனிமையானதல்ல!

**ஓ**ர் சுத்த இருதயம் பெறுவதில் அடைந்திடும் மகிழ்ச்சியைக் காட்டிலும், வேறொரு மகிழ்ச்சி இவ்வுலகில் இல்லவே இல்லை! ஆனால், லோக மாயையின் வேறு காரியங்களைத் தேடி இன்று 'வழி விலகி' ஜனங்கள் மகிழ்ச்சியை இழந்து நிற்கிறார்கள்!

உங்கள் இருதயம் தூய்மை அடையாவிட்டால், நீங்கள் அணைத்துக் கொண்ட அனைத்தும் வெறுமையே! ஆனால் நீங்களோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, உங்கள் நெஞ்சின் தூய்மையில் அவர் தங்கி விட்டால், நீங்கள் வறுமையான ஆப்பிரிக்கா செல்லுங்கள், வசதி குறைந்த இந்தியா செல்லுங்கள்..... அவை அனைத்தும் உங்கள் பேரின்பமாய் இருக்கும்! ஏனெனில், அதன் ஒரே காரணம், நீங்கள் போகும் இடமெல்லாம் தேவன் உங்களோடு தங்கி இருக்கிறார்! இதற்கு மாறாக, உங்கள் இருதயம் தூய்மையற்றதாய் இருந்து, கர்த்தர் உங்களைவிட்டு விலகிவிட்டால், நீங்கள் அமெரிக்காவே சென்று பார்த்தாலும் உங்களுக்கு மகிழ்ச்சி இருக்கவே இருக்காது!

**- ரத்னம்**